**மத்திய கலாசார நிதியம் - 2018 மற்றும் 2018**

---

மத்திய கலாசார நிதியத்தின் 2018 மற்றும் 2019 வருடங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான கட்டுப்பாட்டு சபையினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் ஆன காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தா் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 மற்றும் 2019 வருடங்களிற்கான கட்டுப்பாட்டு சபையினால் அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

## 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியக் சட்டம்** | | | |
| **(i)** | (4) (ஈ) பிரிவு | நிதியத்திற்குரிய அதிகாரம், பணி மற்றும் செயல்பாடு செயற்படுத்தல் மற்றும் நிறைவேற்றுவதற்காகவும் நிதியத்தின் குறிகோள் நடவடிக்கைகளில் செயல்படுத்துவதற்காகவும் | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவைப்படுகின்ற அனைத்து உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பாட்டு சபையினால் நேரடியாக அல்லது கட்டுப்பாட்டு சபையினால் அதற்காக ஆவனத்தினால் அதிகாரம் கொடுக்கப்பட்ட ஊழியர்களினால் அணுகக்கூடியதாக இருப்பினும் அதற்கு முரணாக நிதியத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தரின் அனுமதியின் அடிப்படையில் நிதியத்தின் பணிப்பாளர் (கட்டுப்பாட்டு) மற்றும் மனிதவள அபிவிருத்தியினால் செத்சிரிபாய II ஆம் கட்டத்தின் ‘‘டீ’’ முனையத்தில் நிதியத்தின் பிரதான அலுவலகம் பேணிச் செல்லல் தொடர்பாக 2019 பெப்ரவரி 13 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | | |
| **(ii)** | **04 (எ) உப பிரிவு** | கலாசார முக்கோணத்திற்குள் அல்லது தவிர கலாசார நினைவுச் சின்னங்கள் அபிவிருத்தி, சமய நடவடிக்கைகள் ஊக்குவிப்பு, சமய மேம்பாடு மற்றும் சமய நடைமுறைகள் மேம்பாடு, கலாசார மற்றும் சமய துறையில் பணி செய்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் மற்றும் கலைஞர்களுக்கு உதவி செய்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கு நிதியினால் ஆரம்பத்திலிருந்து இது வரையும் அதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறையுடனான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | நிதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(iii)** | **8 (இ) உப பிரிவு** | வெளிநாடுகளில் சமய நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்வதற்காக 2018 மற்றும் 2019 வருடங்களினுள் செயற்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் | வெளிநாடுகளில் சமய நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்வதற்காக சட்டத்தின் 4 (எ) பிரகாரம் தேவையான விதிகள் தொகுக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அந்த நடவடிக்கைகள் செயற்படுத்தல் கட்டுப்பாட்டு சபையின் பொறுப்பாகும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம்** | | | |
| **(i)** | **நி.பி 139 (4), நி.பி 139 (5) மற்றும் நி.பி 389** | முறையான பற்றுச்சீட்டு பெறப்படாமல், பணம் செலுத்தப்படும் போதும் மற்றும் காசோலை ஒப்படைக்கும் போதும் தொடர்புடைய பங்காளரின் அடையாளத்தினை உறுதி செய்யப்படாமல் சமய மேம்பாடு மற்றும் சமய ஸ்தலங்கள் மற்றும் சமய நடைமுறைகளை பேணிச்செல்வதற்காக 2019 வருடத்தினுள் 37 சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளர்கள் மற்றும் வெளி நபர்களுக்கு ரூ.9,718,179 ஆன பெறுமதியுடைய உதவி பணத்திற்கு தொடர்புடைய காசோலைகள் வரிசை அமைச்சு பணிநிலையின் ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தகன நடவடிக்கைகள் மற்றும் ஊர்வல (பெரஹெர) பண்டிகைகளுக்காக விரைவாக நிதி உதவி வழங்கப்படவேண்டிய தனால் அமைச்சின் ஊழியர்களின் கையில் காசோலைகளை அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | காசோலைகள் எழுதும்போது மற்றும் தொடர்புடைய காசோலைகள் ஒப்படைக்கும் போது நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தொடர்புடைய பணம் பங்களிப்பாளரின் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | **நிதி பிரமாணம் 881** | பிணைப்பணம் செலுத்த வேண்டிய பதவியொன்றிற்கு ஊழியர் பணிக்கப்படும் போது அல்லது அவ்வாறான பதவியொன்றிற்கு இடமாற்றப்படும் போது அந்த ஊழியரால் அந்த பதவிக்கு பணிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டியிருப்பினும் 2018 மார்ச் மற்றும் மே மாதங்களில் இணைக்கப்பட்ட 11 அனுமதிப்பத்திர விற்பனையாளர்கள் 2019 சனவரி 25 ஆம் திகதி வரையிலும் பிணைப்பணம் செலுத்தப்பட்டிருக்வில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | பிணைப்பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களில் பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக ஏற்படக் கூடிய மோசடிகள் அடையாளப்படுத்திக் கொள்வதற்கு எடுக்கப்படக் கூடிய ஏனைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | **இலங்னை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் (ii) அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு** | அரச சேவையிலிருந்து இளைப்பாரிய ஒருவர் அரச சேவையில் பதவியொன்றுக்கு மீண்டும் பணிக்கப்படுவதற்கு அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் சேவையில் பணிக்கப்படுவதற்கு அமைச்சரவையின் முன் அனுமதி பெற வேண்டியிருப்பினும் அவ்வாறான அனுமதி பெறப்படாமல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதியத்தினால் 60 வயதிற்கு மேற்பட்ட 03 ஊழியர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அரச சேவையிலிருந்து இளைப்பாறிய ஒருவர் மீண்டும் சேவையில் பணிக்கப்படுவதற்கு அமைச்சரவையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். |
| **(ஈ)** | **பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | | | |
| **(i)** | **2003 இன் யூன் 02 ஆம் திகதிய PED/12 இலக்கமுடைய சுற்றறிக்கையின் 8.3.3 (உ)** | ஊக்க கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது செயற்திட்ட ஊழியர்களின் விடுமுறை மற்றும் சம்பளமற்ற விடுமுறை தகவல்களின் பிழையற்றத்தன்மை உறுதி செய்யப்படாமல் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஊக்க கொடுப்பனவு செலுத்தப்படும் போது ஊழியர்களின் விடுமுறை மற்றும் சம்பளமற்ற விடுமுறை தகவல்களின் பிழையற்றத்தன்மை பொறுப்புக் கூறக்கூடிய ஊழியர் ஒருவரினால் உறுதி செய்யப்படல் வேண்டும். |
| **(ii)** | **2015 மே 25 ஆம் திகதிய PED1/2015 இலக்கமுடைய சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் 4 ஆம் பிரிவு** | உத்தியோகபூர்வ வாகனமொன்று பணிக்கப்பட தகுதி பெறப்படாத MM-1-2 சம்பள அளவுடைய பதவிக்கு இணைக்கப்பட்ட 05 ஊழியர்களுக்காக இணைக்கப்பட்ட நாள் தொடக்கம் சேவை நிறைவு செய்யப்பட்ட திகதி வரையில் இந்த சுற்றறிக்கையின் விதிகளுக்கு முரணாக ரூபா 2,797,890 ஆன எரிபொருள் | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வாகனமொன்று பணிக்கப்படுவதற்கு தகுதி பெறப்படாத ஊழியர்ளுக்கு செலுத்தப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் போகுவரத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | | கொடுப்பனவு மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |
| **(iii)** | **1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி** | நிதியத்தினால் வருடாந்த இருப்பு பரிசோதனை நடவடிக்கைகள், கணக்கீட்டு நடவடிக்கைகள், விசேட கண்காட்சி, புத்தகங்கள் மற்றும் படங்கள் விற்பணை நடவடிக்கைகளுக்கு தொடர்பாக திரைசேரி அனுமதி இல்லாமல் கட்டுப்பாட்டு சபை அனுமதியின் அடிப்படையில் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்பட்டிருக்கப்படவில்லை. | அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் சரியாக அனுமதிக்கப்பட்ட பிரதிலாபம் மட்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(உ)** | **2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்க பந்தி மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03 /2017 இலக்கமுடைய சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி** | கை ரேகை பதியப்படும் இயந்திர பயன்பாட்டின் மூலம் ஊழியர்களின் வருகை மற்றும் புறப்பாடு உறுதி செய்யப்படாமல் 2018 ஆம் வருடத்தில் நிதியத்தின் ஊழியர்களுக்கு மற்றும் அதிகாரிகளுக்கு சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பணவு மற்றும் விடுமுறை தின கூலி செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கை ரேகை பதியப்படும் இயந்திரம் பயன்பாட்டினூடாக ஊழியர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல், புறப்படல் உறுதி செய்யப்பட்டு சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின கூலி போன்றன செலுத்தப்படல் வேண்டும். |
| **(ஊ)** | **முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை** | | | |
| | **2016 சனவரி 28 திகதிய DMA/2009 (I) (i) இலக்கமுடைய சுற்றறிக்கை மற்றும் 2019 சனவரி 12 திகதிய DMA/01- 2019 இலக்கமுடைய சுற்றறிக்கை** | குறைந்தபட்சம் கால் ஆண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகதமைத்துவ குழு கூட்டம் நடத்தப்பட வேண்டியிருப்பினும் நிதியத்தினால் 2018 ஆம் வருடத்திற்காக 02 கூட்டங்களும் 2019 ஆம் வருடத்திற்காக ஒரு குழு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | குறைந்தப்பட்சம் கால் ஆண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | **2011 யூலை 21 ஆம் திகதிய DMS/E1/54/9/241 இலக்கமுடைய முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதம்** | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான அனுமதியின்றி அனுமதிக்கப்பட்ட பணிநிலைக்கு மேலதிகமாக புதிய பதவிகள் உருவாக்கல் மற்றும் 2011 யூன் 30 ஆம் திகதியின் பின்னர் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படல் மேற்கொள்ளப்பட கூடாததாயினும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிப்பத்திர விற்பனையாளர் / காசாளர் மற்றும் பிரதான அனுமதிப்பத்திர விற்பனையாளர் / காசாளர் என 5 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்ட போது கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின் அடிப்படையில் 14 அனுமதிப்பத்திர விற்பணையாளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அதில் சேவைக்கு வருகை தரப்பட்ட 11 அனுமதிப்பத்திர விற்பனையாளர்களுக்காக இணைக்கப்பட்ட திகதியிலிருந்து 2018 நவம்பர் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா. 3,030,763 செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான அனுமதி இல்லாமல் அனுமதிக்கப்பட்ட பணிநிலைக்கு மேலதிகமாக இணைக்கப்படல் கூடாது. |

## 2.2 அங்கிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலாசார முக்கோணத்திற்கு வெளியாக அமைந்துள்ள காலி, ரம்பா விகாரை, அபேகம, கதிர்காமம், யாபஹுவ மற்றும் புதுருவகல ஆகிய பாரம்பரிய இடங்களுக்கு உட்பிரவேசிக்கின்ற சுற்றுலா பயணிகளிடமிருந்து சட்டத்தின் விதிகளுக்கு முரணாக அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டு நிதியம் வருமானம் உழைத்திருந்தது. | நிகழ்காலத்திற்கு பொருந்தக்கூடிய வண்ணம் சட்டம் திருத்தப்படுவதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | சட்டத்தின் விதிகளுக்கு முரணாக கலாசார முக்கோணத்திற்கு வெளியே அமைந்துள்ள பாரம்பரிய இடங்களுக்காக அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்படுவதற்காக சட்டம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சர்ச்சை தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியச் சட்டத்தின் 4 (ஊ) உப பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு சொந்தமான பணத்திற்காக சபையின் கருத்திற்கேற்ப முதலிடுவதற்கு மற்றும் அந்த முதலீடு மீண்டும் பெறப்படுவதற்கு, மீண்டும் முதலிடுவதற்கு மற்றும் மாற்றுவதற்கு மற்றும் அந்த முதலீடுகளில் பெறப்படுகின்ற வருமானம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு இயலும். எனினும் நிதியத்தினால் முதலீடு மீண்டும் பெறப்படுவதற்கு முன்னர் சபையின் கருத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் வருடத்தினுள் ரூபா 126.6 மில்லியன் முதலீடு மீண்டும் பெறப்பட்டிருப்பினும் அதற்காக 2019 மார்ச் 15 ஆம் திகதி பின்னரான அனுமதி பெறப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டுப்பாட்டு சபையின் அனுமதி பெறப்படாமல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,058.4 மில்லியன் ஆன முதலீடு மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த முதலீடு மீண்டும் பெறப்படுவதற்காக 2019 நவம்பர் 15 ஆம் திகதி கட்டுப்பாட்டு சபையின் பின்னரான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பாக கருத்து கூறப்பட்டிருப்பினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அத் தகவல்களின் நம்பிக்கை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சனை ஏற்பட்டது.<br><br>நிதியத்தினால் முறையான செலவு கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றபடாதிருந்தமையினால் மேற் குறிப்பிட்ட வண்ணம் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் கட்டுப்பாட்டு சபையினால் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டமை கணக்காய்வின் போது உறுதி செய்யப்படுவதற்கு முடியாது போனது.<br><br>2019 ஆம் வருடத்தினுள் மேள்கொள்ளப்பட்டுள்ள, அத்திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக ( பணம் முதலீடிற்கு மற்றும் முதலீடு மீண்டும் பெறப்படுவது | முதலீடு எடுத்தல் அனைத்து வருடங்களிலும் மேற் கொள்ளப்பட்டு இருந்தது. 2018 ஆம் வருடத்தில் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக கட்டுப்பாட்டு சபையின் அனுமதி 2019 ஆம் வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர்கள் இருவரின் முன் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பாட்டு சபையின் எட்டு அங்கத்தவர்களின் பின்னரான அனுமதியும் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. | சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக நிதியத்தின் நோக்கத்திற்காக மட்டும் கட்டுப்பாட்டு சபையின் முன் கருத்தின் அடிப்படையில் முதலீடு மீண்டும் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் கட்டுப்பாட்டு சபை அனுமதித்த பணிக்காக மட்டும் பயன்படுத்துவதற்கு கவனத்திற் கெள்ளல் வேண்டும். |

உள்ளடங்கலாக) 238 கட்டுப்பாட்டு சபை பத்திரங்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமைக்கு 2019 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற 209 ஆம் இலக்க கட்டுப்பாட்டு சபை கூட்டத்திற்கு தொடர்புடைய பதிவேடொன்று என குறிப்பிடப்பட்டு அமைச்சின் செயலாளரினால் நிதியத்தின் பணிப்பாளர் (கட்டுப்பாட்டு) இற்கு 2019 நவம்பர் 20 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்த அந்த பதிவேடு நிதியத்தின் பணிப்பாளர் (கட்டுப்பாட்டு மற்றும் மனிதவளம்) இனால் 2020 யூலை 24 ஆம் திகதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் சட்டத்தின் 3(2) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையின் உடனிருப்பவர்களான பிரதமர், பிரதம செயலாளர் மற்றும் கல்வி அமைச்சரின் கையொப்பம் அந்த அனுமதியுடைய பத்திரிகையில் வைக்கப்படாமையினால் மற்றும் அந்த ஒவ்வொரு கட்டுப்பாட்டு சபை பத்திரங்கள் ஏதேனும் பரிசோதனை பணிகளுக்காக வேறு தரப்பினர் பெற்றுக் கொண்டமையினால் அந்த ஒவ்வொரு பத்திரங்கள் கணக்காய்விற்கு உட்படுத்த முடியாத காரணத்தினால் அந்த கட்டுப்பாட்டு சபை அனுமதிகள் தொடர்பாக இன்னுமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் தேவை வலியுறுத்தப்படுகின்றது.
மேலும் 2019 நவம்பர் 15 திகதி கட்டுப்பாட்டு சபை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டதென கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், அதன் பன்னிரெண்டு கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்களில் எட்டு நபர்களின் கையொப்பம் உள்ளடக்கப்பட்டிருப்பினும் சபையின் தலைவரின் (பிரதமர்) கையொப்பம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிதியச் சட்டத்தின் 3 (5) உப பிரிவின் பிரகாரம் தலைவர் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராத சந்தர்ப்பத்தில் வருகை தந்துள்ள அங்கத்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் அங்கத்தவர் அந்த கூட்டத்தின் தலைமைத்துவம் எடுக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான தீர்மாணமொன்று எடுக்கப்பட்டமைக்கான அடையாளம் பரிசோதனையின் போது காணப்படவில்லை.

மேலும் 2019 நவம்பர் 15 ஆம் திகதிக்கு பின்னர் முதற்தடவை 2020 பெப்ரவரி 03 ஆம் திகதி நடைப்பெற்ற கட்டுப்பாட்டு சபை கூட்டத்தின் போதும் 2019 நவம்பர் 15 ஆம் திகதிக்கு தொடர்புடைய 209 இலக்கமுடைய கட்டுப்பாட்டு சபை அறிக்கை அனுமதிக்கப்பட்டிராததுடன் அந்த பத்திரம் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதென தலைவரினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு விளைவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/ 2014 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 ஆம் வருடத்திற்காக செயல்பாட்டு திட்டமொன்று (சமய பிரிவை தவிர) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்திலிருந்து செயல்பாட்டு திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | நிதியத்தினூடாக அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வரையில் முறையான செல்பாட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது கட்டுப்பாட்டு சபையினால் அனுமதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். ஆகவே அது தொடர்பாக முகாமைத்துவத்தின் கடுமையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் வருடத்திற்கான நிதியத்தின் முன்னேற்ற சுருக்கத்தின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 1,529 மில்லியன் ஆன 421 செயல்பாடுகள் 2018 ஆம் வருடத்தினுள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டு இருப்பினும் இதில் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 189 மில்லியன் ஆன 55 செயல்பாடுகள் வருடத்தினுள் செற்படுத்தபடுவதற்கு நிதியத்தினால் இயலாது காணப்பட்டது. மேலும் 2019 ஆம் வருடத்திற்கு தொடர்புடைய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 340.8 மில்லியன் ஆன 53 அகழ்வு பாதுகாப்பு செயல்பாடுகள் 2019 திசெம்பர் 31 ஆம் | தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்படல் தாமதமாகியதனால் செயற்படுத்துவதற்கு இயலாது போனது. | திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தொடர்புடைய அனுமதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்காக பணம் ஒதுக்கப்படுவதற்கும் திட்டத்தின் பிரகாரம் தொடர்புடைய பணிகள் ஆரம்பிப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்படுதல் வேண்டும். |
| **(இ)** | அநுராதபுரம் மகா விகாரை செயற்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த துடுகெமுனு சிலை சூரிய வெளிச்சம் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்தல் நோக்கத்துடன் 2018 ஆம் வருடத்தில் ரூபா 1,393,413 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் நிர்மாணத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட இடம் தொடர்பாக சைத்யராமதிகாரி நாயக்க தேரர் அனுமதி பெறப்படாமையின் அடிப்படையில் இந்த பணி 2020 யூலை 31 ஆம் திகதி வரையிலும் நிறைவேற்றுவதற்கு முடியாது காணப்பட்டது. | சைத்யராமதிகாரி நாயக்க தேரரின் அனுமதி பெற்றுக் கொடுக்காமையின் அடிப்படையில் பணி நிறைவேற்ற முடியாது போனது. | செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்கு தொடர்புடைய முறையான அனுமதி உள்ளடங்கலாக பிரதான நடவடிக்கை நிறைவேற்றியதன் பின்னர் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | 2018 ஆம் வருடத்தின் வேலை திட்டத்தில் ரூபா 1,665,386 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் “ ஸ்ரீ நேரு ” பிரதமரின் ஞாபக சினனத்தினை தொடர்புபடுத்தி அநுராதபுர மகா விகாரை செயற்திட்டத்தின் நீர் வடித்தலுடன் கூடிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டு ரூபா 43,910 செலவு செய்யப்பட்டிருப்பினும் இந்த பணிக்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமை மற்றும் பயிற்சியாளர்கள் இல்லாமையின் காரணத்தினால் அந்த நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டிருந்தது. | முன்மொழியப்பட்ட இடங்களுக்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமையும் பயிர்சியாளர்கள் இல்லாமையினால் இதன் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு தொடர்புடைய முறையான அனுமதி உள்ளடங்கலாக பிரதான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(உ)** | 2018 வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த அபயகிரிய செயற்திட்டத்திற்கு தொடர்புடைய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 9,484,667 ஆன தங்குமிடத்தின் மலசலக்கூடம் பழுதுபார்த்தல் மற்றும் 02 வாகன தரிப்பிடம் நிர்மாணித்தல் 2020 யூலை 31 திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டதுடன் நூதனசாலையின் மலசல கூடம் நிர்மாணித்தல் பணி கைவிடப்பட்டமையினால் செயற்திட்டம் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த சுகாதார, வாகன தரிப்பிடம் வசதி மற்றும் தங்கியிருக்கும் மாணவர்களின் சுகாதார வசதிகள் | தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் தாமதமாகின. | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு தொடர்புடைய பிரதான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் செயற்திட்டமொன்று தடை இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு செல்ல முடியுமென உறுதி செய்யப்பட்டதன் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படுவதற்கு முடியாது காணப்பட்டது. | | பின்னர் மட்டும் தொடர்புடைய செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஊ)** | சீகிரிய அருங்காட்சியக கட்டிடத்தின் கூரையிலிருந்து மழை நீர் கசிவதை தடுக்க தேவையான பழுதுபார்த்தல் ரூபா 2,410,375 ஆன மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் 2018 ஆம் வருடத்தில் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருப்பினும் அந்த பணி நிறைவேற்றப்படுவதன் முறைமை தொடர்பான இறுதி ஒப்புதலுக்கு வர முடியாமையின் காரணத்தினால் அந்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஊழியர்களின் தேவையின் அடிப்படையில் முறையான மதிப்பீடொன்று மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் அடையாளப்படுத்தப்படாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. மழை நீர் கசிவதால் கட்டிடத்தின் நிறம் குறைந்து காணப்பட்டமையின் அடிப்படையில் இடத்திற்கு காணப்படுகின்ற சுற்றுலா துறையை கவரும் தன்மை குறையலாம் என அவதானிக்கப்பட்டது. | விசேட ஆலோசனைகள் தேவைப்படுகின்றமையினால் அதற்காக பேராதெனிய பல்கலைகழகத்தின் பொறியியலாளர் பீடத்தின் ஆலோசனைகள் பெறப்படும் வரையில் தற்காலிகமாக அந்த பணி நிறுத்தப்பட்டது. | முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் முறையான ஆய்வு மேற்கொள்ளப்படாமல் மதிப்பீடு மட்டும் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அந்த நிலை நிதியத்தின் பணிகளை மேற்கொண்டு செல்வதற்கு தடையாக இருப்பதனால் இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கடுமையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| **(எ)** | சீகிரிய செயற்திட்டத்தில் சீ.சீ.டீ.வீ கெமரா அமைப்பொன்று பொருத்தப்படுவதற்காக ரூபா 9,560,000 ஆன மதிப்பீடொன்றின் கீழ் 2018 ஆம் வருடத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் எந்தவொரு சாதாரண காரணமும் இன்றி அந்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதனால் அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும் போது ஏற்படக்கூடிய மோசடிகள் தடுத்தல் மற்றும், தொல்பொருள், அருங்காடசியகம் பொருட்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்வதற்கு முடியாது காணப்பட்டது | கெமரா அமைப்பை பொருத்துதல் தொடர்பாக அவ்வவ்போது மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவுகளில் மாற்றம் காரணமாக ஆரம்பிப்பதற்கு முடியாது போனது. | அனுமதிப் பத்திரம் வெளியிடலின் பணிகள், தொல்பொருள், அருங்காட்சியக பொருட்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதற்கு இவ்வாறான நடவடிக்கை எடுப்பதற்காக முகாமைத்துவத்தின் கவனம் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஏ)** | அப்சரா வளம் மத்திய நிலையத்தில் முன் முற்றம் தயாரிப்பதற்காக ரூபா 4,975,865 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் 2018 ஆம் வருடத்தினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 2,694,130 செலவிடப்பட்டிருப்பினும் 2020 யூலை 31 ஆம் திகதி வரையிலும் திட்டமிடப்பட்ட வண்ணம் நிலம் தயாரித்தல் மேற்கொள்ளாமை காரணத்தினால் இந்த கட்டிடம் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக திறப்பதற்கு நிதியத்தினால் இயலாது காணப்பட்டது. | நில அலங்கரித்தல் நடவடிக்கைளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு இரண்டு முறை திருத்தப்பட்டதனால் பெறுகை நடவடிக்கைகள் தாமதமாகின. | வேலை திட்டத்தில் வருடாந்த நோக்கத்தினை அடைய எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் வருடத்தினுள் அடையப்படல் வேண்டும். |
| **(ஐ)** | ரூபா 6,572,500 ஆன மதிப்பீட்டின் கீழ் தூபாராம விகாரை சுற்றில் மீதமாக சிதறிக் காணப்படுகின்ற தூண் பகுதிகள் மீண்டும் தட்டையான முற்றத்தில் நிறுவல் நோக்கமாக கொண்டிருப்பினும் காணப்பட்ட எந்தவொரு தூணிலும் பூரணமான காணப்படாமையும் தூண்களின் வலு குறைந்துள்ளமையும் தீர்மாணித்தலினால் அந்த செயற்திட்டம் இன்னுமாக செயற்படுத்தல் பிரச்சணையான இருப்பதனால் 2020 யூலை 31 ஆம் திகதி வரையில் தொடர்புடைய பணிகள் நிறைவேற்றல் கைவிடப்பட்டிருந்தது. | தூண்கள் அடையாளப்படுத்தப்படும் போது தூண்களின் பெரிய பகுதி அளவு இல்லாமையின் காரணத்தினால் அந்த பணிகள் நிறைவேற்றுவதற்கு முடியாமை தீரவளிக்கப்பட்டதுடன் 2019 ஆம் வருடத்தின் தூபாராம பாதுகாப்பு பணிகளில் முதலாவதாக தூண் பகுதிகள் முறையாக கீழ் முற்றத்தில் அமைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருப்பினும் இது வரையிலும் தூண் பகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | தொழிற்பாட்டு ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டியசெ செயற்பாடுகளுக்காக தொழிற்பாடு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் செயற்பாடு திட்டமிடப்பட்டு வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவளக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஒ)** | 2018 ஆம் வருடத்தின் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 4,780,000 ஆன தன்னிச்சையாக ஆவியாகும் அருங்காட்சியகத்தின் கூரை பழுதுபார்த்தல் பணிக்கு தொடர்புடை ஏலம் திறத்தல் 2018 யூலை 16 திகதி நடைப்பெற்றிருப்பினும் தொடர்புடைய நிர்மாண நடவடிக்கைகள் நிர்மாண நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 6 மாதங்களுக்கு அண்மையான காலம் செலவிடப்பட்டு 2019 பெப்ரவரி 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் இந்த பணி 2020 யூலை 31 திகதி வரையிலும் மெதுவாக மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டது. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு தொடர்புடைய பிரதான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஓ)** | 2017 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு நிலைவேற்றப்படாத, 2019 ஆம் வேலை திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 6,704,800 ஆன பொலன்னறுவை பூஜை பூமியின் மின்சார வழங்கல் செயற்திட்டத்தில் கல்விகாரை வலைவில் இருந்து வெளியேறும் கதவு வரையில் தகுந்த வகை உலோக விளக்கு தூண்கள் 170 பொருத்துதல் தொடர்பாக தீர்மாணிக்கும் போது நிதியம், தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் வேறு தரப்பினருடன் ஒப்புதலுக்கு வராமையின் காரணத்தினால் இந்த செயற்திட்டம் மெதுவாக நடைபெற்று வந்தது. | பதில் அனுப்பப்படவில்லை | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு தொடர்புடைய பிரதான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஔ)** | நிதியத்தின் 2018 மற்றும் 2019 வருடங்களின் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த கொழும்பு அபரண நெடுஞ்சாலைக்கு சமாந்தரமாக பொலன்னறுவை பூஜை பூமியில் இரும்பு வேலி நிர்மாணித்தலின் செயற்திட்டம் 2019 ஒக்தோம்பர் 25 ஆம் திகதி வரையில் ஒப்பந்த நிறுவனத்தினால் இந்த வேலியின் 212 மீட்டர் அளவு வேலை பூரணமாக நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட அளவில் இன்னும் 600 மீட்டர் கட்டுமான பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் 2020 யூலை 31 ஆம் திகதி வரையிலும் இந்த பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. | பதில் அனுப்பப்படவில்லை | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளளுக்கு தொடர்புடைய பிரதான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட்தன் பின்னர் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஃ) | 2018 ஆம் வருடத்தின் வேலை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பொலன்னறுவை திவங்க சிலை மட்டும் காணப்படுகிற நுழைவாயில் அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 61,089,451 ஆன நிதி ஏற்பாடு பொலன்னறுவை மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கான பெறுகை குழுவின் அனுமதி பெற்றுக் கொடுப்பதற்கு 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை தாமதமாகியதனால் திவங்க சிலை மட்டும் காணப்படுகின்ற 1.5 கி.மீ தூரத்திலான நுழைவாயிலின் கட்டுமான பணிகள் 2020 யூலை 31 திகதி வரையிலும் நிறைவு செய்யப்படாததுடன் அந்த காரணத்தினால் சுற்றுலா பயணிகளின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வழி பயன்பாட்டிற்கு எடுக்க இயலாது காணப்பட்டது. | பதில் அனுப்பப்படவில்லை | செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளளுக்கு தொடர்புடைய பிரதான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட்தன் பின்னர் வேலை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(க)** | 2017 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட சசுநோதய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 84 சலாசார மற்றும் சமய ஸ்தலங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் வருடத்தினுள் ரூபா 28.6 மில்லியன் கொடுக்கப்படடிருந்தது. நன்கொடை வழங்கப்பட்ட 60 சமய ஸ்தலங்கள், அதாவது 71.4 சதவீதம் குருநாகல மாவட்டத்தின் விகாரைகளான காணப்பட்டதுடன் 29.6 சதவீதம் புத்தலம், இரத்தினபுரி மற்றும் கண்டி மாவட்டங்களுக்காக நன்கொடையாக கொடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நன்கொடை வழங்கப்படும் போது முழு இலங்கையும் உள்ளடக்கப்பட்ட விதத்தில் முறையான முறைமையொன்றின் அடிப்படையில் நன்கொடை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | முதன்மை அடிப்படையில் நான் ஏற்றுக் கொள்கின்றேன் | நிதியத்தினால் நன்கொடை பெற்றுக் கொடுக்கப்படும் போது நியாயமாக முழு இலங்கையும் உள்ளடக்கப்படும் வகையில் நன்கொடை பகிர்ந்து செல்லும் விதத்தில் முறையான முறைமையொன்று தயாரித்து செயற்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நிதியத்தின் வாகன ஓட்டுநர்களுக்காக மேலதிக நேர கொடுப்பனவிற்காக 2018 ஆம் வருடத்தில் ஏற்க்கப்பட்ட செலவு ரூபா 2,249,248 ஆனதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட மேலதிக நேர அளவு பரீசோதனையின் போது நாளாந்த சாதாரண உத்தியோகபூர்வ காலமாகிய 9க்கு மேலதிகமாக மேலதிக நேரம் 8 அல்லது அதற்கு கூடிய மணித்தியால அளவு கடமையில் ஈடுப்பட்டிருந்தனர் | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | மேலதிக நேர கடமையில் ஈடுபடுத்தல் தொடர்பாக மாதாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டு மேலதிக நேர கடமை முடிந்தவரையில் கட்டுப்படுத்தவும் மேலதிக நேர கொடுப்பனவு கட்டுப்படுத்தப்படவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு, கட்டுப்பாட்டு சபையிடம் கொடுக்கப்பட்டிருப்பினும் 2018 மற்றும் 2019 வருடங்களினுள் உரிய நேரத்தில் கட்டுப்பாட்டு சபை கூட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | நிதியத்தின் நோக்கங்கள் பயனுள்ளதாக மற்றும் திறனாக நிறைவு செய்யப்படுவதற்கு கட்டுப்பாட்டு சபை உரிய நேரத்தில் கூட்டப்பட்டு முகாமைத்துவ தீர்மாணங்கள் முறையாக எடுக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | 1999 ஆம் வருடத்தில் அபயகிரி செயற்திட்டத்திற்கு ரூபா 392,400 க்கு கொள்வனவு செய்யப்பட்ட கற்கள் பரிசோதிக்கும் இயந்திரத்தின் பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு கவனமும் கொள்ளப்படாமல் அவ்வப்போது இயந்திரத்தினை நிலைப்படுத்துவதனால் இயந்திரம் தற்போது செயலற்று காணப்பட்டது. இதன் காரணத்தினால் வெளி நிறுவனங்களினால் கற்கள் பரிசோதிப்பதற்கு மேலதிக செலவொன்று ஏற்க்கப்பட்டிருந்ததுடன் இயந்திர பழுதுபார்த்தலுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் 2018 வருடத்தின் பௌதீக பொருள் பரிசோதனையின் போதும் இயந்திரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை | நிறுவனத்தின் வளங்கள் திறமையாக மற்றும் பயனுள்ளதாக பயன்படுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | அலாஹன பரிவேனா உணவகம் சுற்றுலா பயணிகளுக்கு தெளிவாக காணக்கூடிய இடத்தில் ஸ்தாபிக்காமையின் காரணத்தினால் நிதியத்தினால் ரூபா 6,268,387 ஆன செலவில் நிர்மாணிக்கப்பட்ட உணவகம் 2019 ஒக்தோம்பர் 25 ஆம் திகதி வரையிலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் உணவு தேவைக்காக பயன்படுத்த முடியாமல் மூடப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களுக்காக செலவு ஏற்க்கப்படும் போது அதன் உற்பத்தி திறன் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தவர்களின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| **(உ)** | கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்ற ‘‘அபே கம’’ நிறுவனத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் மத்திய கலாசார நிதியத்திற்கு பணிக்கப்படுவதற்கு இரு தரப்பினாலும் 2016 யூன் 16 ஆம் திகதிய ஈடி/10 என்எச்/03/02/01/07 இலக்கமுடைய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ‘‘அபே கம’’ நிறுவனத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் முறையாக பெற்றுக் கொள்வதற்கு 2020 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | ‘‘அபே கம’’ நிறுவனத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் முறையாக கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஊ)** | இணையத்தினூடாக மின்னஞ்சல் அனுமதிப்பத்திரம் வெளியிடல் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வு நிதியத்தனால் மேற்கொள்ளப்பட்டிராமையினால் சீகிரிய செயற்திட்டம் மட்டும் இணையத்தின் ஊடாக மின்னஞசல் அனுமதிப் பத்திரம் வெளியிடல் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த காரணத்தினால் ஏனைய செயற்திட்டங்களில் மின்னஞ்சல் அனுமதி பத்திரம் வெளியிடுவதற்கு 2020 | ICTA நிறுவனத்தில் மென்பொருள் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த சில குறைப்பாடுகளினால் பிரச்சனை உருவாகியுள்ளன. எதிர்காலத்தில் ஏனைய செயற்திட்டங்களுக்காக நிகழ்ச்சி விரிவுபடுத்த முடியும். | ஏதேனும் செயற்திட்மொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தின் நோக்கம், பணிகள், அதற்குரிய காலவறை, பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர், மனிதவள மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | யூன் வரையிலும் முடியாது காணப்பட்டது. | | பௌதீக வளங்களின் தேவைப்பாடு மற்றும் ஏற்க்கப்பட வேண்டிய கிரயம் தொடர்பாக முறையாக அறிந்துக் கொள்ளவதற்காக அது தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென மற்றும் அனைத்து பிரிவும் உள்ளடக்கப்படும் வகையில் அமைப்பு செயற்படுத்தப்படல் வேண்டும். |
| **(எ)** | 2010 பெப்ரவரி 20 மே் திகதிய 447 இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.2 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தகவல் தொழிநுட்ப ஆற்றல் கொண்ட பணிநிலையொன்று இணைத்துக் கொள்வதற்கு நிதியத்தினால் 2020 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேச இணைத்துக் கொள்ளல் நடைமுறையில் இந்த பதவிகளும் உள்ளடக்கப்பட்டு இணைத்துக் கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | இணையத்தின் ஊடாக மின்னஞ்சல் அனுமதிப்பத்திரம் வெளியிடும் அமைப்பொன்று முறையாக செயற்படுத்துவதற்காக தகவல் தொழிநுட்ப அறிவு கொண்ட பணிநிலையொன்று நிதியத்தின் சேவைக்கு பணிக்கப்படல் வேண்டும். |
| **(ஏ)** | 2011 பெப்ரவரி 10 திகதிய அமப11/0169 /555/004 இலக்கமுடைய அமைச்சரவையின் தீர்மாணத்தின் பிரகாரம் நிதியத்தின் வருமானத்தில் 25 சதவீதம் பாரம்பரிய இடங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக தேசிய பாரம்பரியம் தொடர்பாக அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டியிருப்பினும் 2018 மற்றும் 2019 வருடங்களில் உழைக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திர் வருமானத்தில் ரூபா 1,896.1 மில்லியன் பணம் அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டியிருப்பினும் ரூபா 1,151 மில்லியன் மட்டும் அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | தேசிய பாரம்பரியம் தொடர்பாக அமைச்சினால் செயற்திட்டங்களுக்காக உண்மையாக செலவிடப்படும் பணம் மட்டும் பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் வருடத்தில் பாஸ்கு தாக்குதலினால் வருமானம் குறைந்ததினால் 25 சதவீதம் பெற்றுக் கொடுத்தல் பிரச்சனையாக காணப்படுகின்றது. | 2011 பெப்ரவரி 10 திகதிய அமப11/ 0169/555/004 இலக்கமுடைய அமைச்சரவையின் பத்தரிகையின் பிரகாரம் நிதியம் உழைக்கின்ற வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் இடங்கள் பேணிச் செல்வதற்காக அமைச்சுக்கு பெற்றுக் கொடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஐ)** | சமய ஸ்தலங்களில் விழா ஊர்வல பண்டிகைக்காக நிதிய சட்டத்தின் பிரகாரம் நன்கொடை பெற்றுக் கொடுக்க முடியுமாயிருப்பினும் அதற்காக எந்தவொரு முறையான முறைமையொன்றும் நிதியத்தினால் அடையாளப்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்தினால் எந்தவொரு அடிப்படை அல்லது நிதி தேவை தொடர்பாக மதிப்பீடு இல்லாமல், பிரதேச செயலாளர்களுக்கு எழுதப்பட்டிருந்த காசோலைகள் தொடர்புடையஅமைச்சரின் பணிநிலையின் உத்தியோகத்தர்களுக்கு மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக 13 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதின் பெறுமதி ரூபா 4,250,000 ஆக காணப்பட்டது. | ஊர்வல பண்டிகைகளுக்காக மற்றும் தகன விழாக்களுக்காக அமைச்சு அலுவலகத்திற்கு விண்ணப்பக் கடிதம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைத்தல் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். | இந்த பணி நிதியத்தினால் அங்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்படும் நன்கொடை என்பதினால் அவ்வாறான நன்கொடை வழங்கல் நிதியத்தின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த நன்கொடை பெற்றுக் கொடுப்பதற்காக முறையான முறைமையொன்று வழங்கப்படுவதற்கு விரைவாக செயற்படுத்தல் வேண்டும். |
| **(ஒ)** | நிதியத்தின் பிரதான அலுவலகம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரையில் நிதியத்தின் அலுவலகம் பேணிச் செல்வதற்காக நிதியத்தினால் 2017 ஆம் வருடத்தில் செத்சிரிபாய ii ஆவது கட்டிடத்தில் 4 ஆம் மாடியில் ‘‘டி’’ பகுதி கூலி அடிப்படையில் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் வருடத்தில் மற்றும் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை கட்டிட கூலி, சுகாதார நடவடிக்கைகளுக்காக கட்டணம் மற்றும் மின்சார கட்டணம் என்று முறையாக ரூபா 17,311,809 உம் , 13,067,655 உம், நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 யூலை வரையிலும் பிரதான அலுவலகத்தில் பழுதுபார்த்தல் நடடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நிதியத்திற்கு இயலாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். நிலத்தின் உரிமை நிதியத்திற்கு இல்லாததனால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முடியாது காணப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகள் கடைபிடிக்கப்பட்டு குறைந்த கிரயம் மற்றும் பண்பாண நிலையுடன் மாற்று சந்தர்ப்பங்கள் ஆய்வின் ஊடாக மிகவும் உகந்த தீர்வு தெரிந்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலத்தின் உரிமை தீர்க்கப்பட அல்லது பணித்தல் அதிகார பத்திரமொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஓ)** | முழு இலங்கையும் உள்ளடக்கப்படும் வகையில் மற்றும் அனைத்து மதங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஒரு கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3 மில்லியன் ( வட் மற்றும் நிர்வாக செலவு அற்று) ஆன ஓய்வு நாள் | | |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலை கட்டிடங்கள் 332 நிர்மாணிக்கப்பட்டு பரிசலிக்கப்பட 2019 ஆம் வருடத்தினுள் ‘‘சிசு தஹம் செவன’’ பெயரில் இந்த நிகழ்ச்சி செயற்படுத்தப்பட்டிருந்தது. 2019 மார்ச் 15 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின் அடிப்படையில் ஒரே கட்டிட திட்டத்திற்கமைய அறநெறி பாடசாலை கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் வருடத்தின் வரவு செலவு பதிவேட்டிற்கமைய அந்த நிகழ்ச்சியின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,140 மில்லியன் ஆனது. கட்டிட திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு வரிசை அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கட்டத்தின் கீழ் உரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தங்களின் பற்றுச் சீட்டுகள் பரிசோதிக்கப்படாமை, உத்தரவாதம்/ பாதுகாப்பு பெற்றுக் கொள்வதில் தேவைப்பாடு இல்லை என, தகுந்த காலத்தினுள் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்வதற்கு முடியாதே போனால் கட்டணம் செலுத்தல் குறைக்கப்படாமல் நிர்மாணித்தல் காலம் நீடித்தல் ஆகிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| **(i)** | இந்த கட்டுமானம் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்ளினால் மட்டும் நிர்மாணிக்கப்பட கடடுப்பாட்டு சபையின் அனுமதி மட்டும் பெற்றுக் கொண்டிருப்பினும் இதற்காக பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.14.1 பிரகாரம் அமைச்சினால் பணிக்கப்படுகின்ற பெறுகை சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொடர்புடைய விடயத்திற்காக அமைச்சரவினால் பணிக்கப்படுகின்ற பெறுகை சபையின் அனுமதி பெறுதல் வேண்டும். |
| **(ii)** | 3 ஆம் கட்டத்தின் கீழ் மேற்படி மதிப்பீட்டின் பிரகாரம் அறநெறி பாடசாலை கட்டிடங்கள் 298 இன் கட்டுமாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஒக்தோம்பர் 30 ஆம் திகதி வரையில் ரூபா 753.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 03 நிறுவனங்களுக்கு அதாவது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 121.5 மில்லியன் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 353.3 மில்லியன் மற்றும் அரச பொறியியளாலர்கள் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 278.7 | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் தொடர்புடைய அங்கீகாரம் பெறல், செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடையப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் ஆன முற்பணம் செலுத்ப்பட்டிருந்தது. | | |
| **(iii)** | மேற்படி கட்டுமான பணிகள் கொடுக்கப்பட்ட 298 கட்டிடங்களில் 45 மட்டும் நிறைவு செய்யப்பட்டு 2019 மே 30 ஆம் திகதிக்கு நிதியத்திற்கு கொடுக்கப்பட்டிருந்தும் உயர்நத பட்சமாக 2019 ஒக்தோம்பர் 30 ஆம் திகதி ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்த எஞ்சிய 253 கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு பெறுமதியில் 29.2 சதவீதத்திலிருந்து 94.6 சதவீதம் வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டு நிதியத்திற்கு மீண்டும் ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. ஒப்புக்கொடுக்கப்பட்ட கட்டிடங்களில் சில கட்டிடங்கள் குறிப்பிட்ட தரத்திற்கு அமைவாக பூர்த்தி செய்யப்படாதிருந்தும் கட்டுமானங்களுக்கு தொடர்புடைய புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் குறைப்பாடுகள் காரணமாக அது தொடர்பாக முறையான நடைமுறை எடுக்கப்படுவதற்கு நிதியத்திற்கு முடியாது காணப்பட்டது. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன் கட்டுமாணங்கள் நிறுவனத்தின் பிணைப்புக்கு உட்படும் வகையில் ஒப்பந்தங்களுக்கு உடன்படலும் செய்யப்பட்ட வேலைக்காக பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரின் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கும் செயற்படல் வேண்டும். |
| **(iv)** | அறநெறி பாடசாலை தெரிந்து கொள்ளும் முறை தொடர்பாக அளவுகோள் மற்றும் அறநெறி பாடசாலைகளின் அளவு தீர்மாணித்தலின் போது பயன்படுத்தப்படுகின்ற முறைமைகள் கட்டுப்பாட்டு சபையின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை | நிதியத்தின் சட்டத்திற்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(v)** | கட்டிய கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்புக்கொடுக்கப்படாமை, சில கட்டிடங்கள் வேறு காரணங்களுக்காக பயன்படுத்தியிருத்தல், சில கட்டிடங்கள் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமை, பிரதிலாபிகளிடமிருந்து நிதியத்திற்கு விண்ணப்பிக்காதவிடத்து கட்டிடங்கள் கட்டுவித்தல், பிரதேச செயலாளர்களினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்ப கடிதங்கள் பட்டியலுக்கு வெளியே கட்டிடங்கள் கட்டுவித்து கொடுத்தல் போன்ற காரணங்களினால் நிதியத்தினால் முறையான ஆய்வொன்னு இல்லாது மற்றும் தேவை தொடர்பான ஆய்வொன்று இல்லாது இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை | தேவை தொடர்பாக முறையான ஆய்வொன்றும் இல்லாது செயற்திட்டம் செயற்படுத்தலின் காரணத்தினால் நிதியத்தின் பணம் செயற்திறனாக முகாமைத்துவம் செய்யப்படாமை தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| **(ஔ)** | அலாகன பரிவேன செயற்திட்டத்தின் அருங்காட்சியகத்தின் அருகில் மலசலகூட அமைப்பு 2016 சனவரி 16 ஆம் திகதி கட்டுமாணம் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் 2019 ஒக்தோம்பர் 25 ஆம் திகதி பௌதீக பரிசோதனையின் போது உள்ளேயம் வெளியேயும் பூர்த்திசெய்யப்பட வேண்டிய பணிகளில் 85 சதவீதம் மட்டும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும் மலசல கூட பகுதிகள் பொருத்தல், நீர் மற்றும் மின்சார இணைப்புகள் பெற்றுக் கொடுக்கப்படாமையினால் மற்றும் கட்டுமான பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணத்தினால் செலவிடப்பட்ட ரூபா 7,262,168 ஆன பணம் பயனற்ற செலவாக காணப்பட்டது. 2020 யூலை 31 ஆம் திகதி வரையிலும் இந்த பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | நோக்கங்கள் அடையப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| **(ஃ)** | வெளிநாட்டு சுற்றுலா பயனிகளுக்கான அனுமதிப் பத்திரம் அச்சுப்பதிக்கையில் அனுமதிப்பத்திரம் மேசடித்தனமாக புழக்கப்படுதல் தடுப்பதற்காக குறைந்தபட்சம் பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பான முறைமையொன்று அதாவது பாதுகாப்பான தாள் பயன்படுத்தல் , நீர் அடையாளம் அல்லது பாதுகாப்பான முத்திரை இடுதல், பாதுகாப்பான எண் அடுதல், துளையிடுதல் (perforation) மற்றும் கொள்கையுடன் அச்சிடல் ஊடாக பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்பட்டு அது தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு உறுதியாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்படவில்லை. | மோசடிகள் நடைபெறுவதற்குரிய அபாயமான பணத்திற்கு சமமான பெறுமதியுடைய அனுமதி பத்திரம் அச்சிடல் செயன்முறை தொடர்பாக மிகவும் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். |
| **(க)** | சீகிரிய செயற்திட்டத்திற்கு உரிய உணவகத்திலிருந்து 2019 மார்ச 15 ஆம் திகதியிலிருந்து 2019 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை ரூபா 652,500 செலுத்தப்பட வேண்டிய வரி பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சீகிரிய செயற்திட்டற்காக பெற்றுக்கொண்டுள்ள நீர் மாணி ஊடாக உணவகத்திற்காகவும் நீர் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அதற்காக வேறாக நீர் மாணி பொருத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | நிதியத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை வட்டி வருமானம் பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக செயற்பட வேண்டும் எனவும் மற்றும் உணவகத்திற்காக வேறாக நீர் மாணி பொருத்தப்படல் வேண்டும். |

## 2.6 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2018 திசெம்பர் மாதம் காசேட்டின் பிரகாரம் ரத்து செய்யப்பட்ட ரூபா 22,151,181 ஆன காசோலைகளுக்கு தொடர்பாக நிதிப்பிரமாணம் 392 (இ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைப்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ரத்து செய்யப்படுகின்ற காசோலைகளுக்கு தொடர்பாக நிதிப் பிரமாணம் 392 (இ) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | தபாலினால் அனுப்பப்படுகின்ற அனைத்து காசோலைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் 388 (1) பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தபாலினால் அனுப்பப்படுகின்ற அனைத்து காசோலைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் 388 (1) பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தபாலினால் அனுப்பப்படுகின்ற அனைத்து காசோலைகள் தொடர்பாகவும் கூறப்பட்ட நிதி பிரமாணத்தின் பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |
| **(இ)** | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கி கணக்கிணங்க கூற்றின் பிரகாரம் ரூபா 91,402 ஆன கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 13 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 (ஆ), (இ) , (ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 (ஆ), (இ) , (ஈ) பிரகாரம நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** | நிதியத்தின் பிரதான அலுவலகத்தினால் செயற்திட்ட செலவு திருப்பி செலுத்துகையில் காசோலைகள் பயன்படுத்தப்பட்டிராததுடன் அதற்காக நிதியத்தின் கணக்காளர், உதவி கணக்காளர், பணிப்பாளர் (கட்டுப்பாடு மற்றும் மனழதவள அபிவிருத்தி), கணக்கு உத்தியோகத்தர் ஆகிய உத்தியோகத்தர்களின் கையெழுத்திலான கடிதத்தினூடாக வங்கிக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் மாதத்தினுள் மட்டும் ரூபா 119,565, 582 ஆன பணம் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காசோலைகள் இல்லாது கட்டளையினால் அவ்வாறான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு கட்டுப்பாட்டு சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்காக கட்டுப்பாட்டு சபையின் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசோலைகள் இல்லாது கட்டளையினூடாக கொடுப்பணவு மேற்கொள்வதற்காக கட்டுப்பாட்டு சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பான வலுவான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 2.7 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திஸ்ஸமஹாராமய செயற்திட்டத்திற்கு உரிய கற்கள் பரிசோதிக்கும் இயந்திரம் 2015 ஏப்ரல் தற்காலிக அடிப்படையில் அநுராதபுர இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி வரையிலும் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் வருடத்தில் தெபரவெவ திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி சங்கத்திற்கு 19 நெளி தகரத் தகடுகள் மற்றும் 01 கூடார துணி பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் 2019 சனவரி 07 திகதி வரையிலும் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சதஹிரு சேயவின் (விகாரையின்) கட்டுமான பணிகளுக்காக 1455 GI குழாய்கள் மற்றும் 2,150 கப்ளின் உம் , பொத்துவில் கடல் விகாரைக்கு GI குழாய்கள் 250, மற்றும் 500 கப்லின்க்ஸ் 500 உம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 07 ஆம் திகதி வரையிலும் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட் சொத்துக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.8 பணி நிலை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் பிரதான அலுவலகம் மற்றும் செயற்திட்டங்கள் இடையில் நல்ல ஒருங்கிணைப்பு மற்றும் முறையான மேற்பார்வை இல்லாமை, செயற்திட்ட அலுவலகங்களின் விடுமுறை, பதில் விடுமுறை, பகுதி வீடுமுறை பரிசோதித்தல், சம்பளம் கணக்கு பார்த்தல், கடமைக்கு வருகை தரல் மற்றும் வெளியேரல் நேரங்கள், கைநேரை இயந்திரம் செயலற்றவுடன் பிழைத்திருத்தம் மற்றும் அறிக்கை முன்வைத்தலின் போது நிதியத்தினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் பரிசோதிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்டது. | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பணிநிலை நிர்வாகத்தின் போது நிதியத்தின் பிரதான அலுவலகம் மற்றும் செயற்திட்டங்களின் இடையில் நல்ல ஒருங்கிணைப்பு மற்றும் முறையான மேற்பார்வையும் மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 2011 யூலை 21 ஆம் திகதிய DMS/E1/54/9/241 இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தின் 04 ஆவது பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான அனுமதி இல்லாது பணிநிலைக்கு மேலதிகமாக புதிய |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதி இல்லாது அனுமதிக்கபட்ட பணிநிலைக்கு புதிய பதவிகள் ஏற்படுத்தல் மேற்கொள்ளப்படக் கூடாததாயினும் 2017 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின் அடிப்படையில் 05 மாகாண உதவி பயிப்பாளர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின் அடிப்படையில் மாதத்திற்கு ரூபா 45,930 வீதம் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | | பதவிகள் ஏற்படுத்துதல் மேற்கொள்ளல் கூடாது. |
| **(இ)** | 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 16 உயர் மட்ட பதவிகளில் 14 உம் ( பணிப்பாளர் நாயகம் பதவியும் உட்பட) 46 மூன்றாம் நிலை பதவிகளில் 12 உம், 478 இரண்டாம் நிலை பதவிகளில் 64 உம், 2468 முதன்மை நிலை பதவிகளில் 451 ஆக 541 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2 மூன்றாம் நிலை பதவிகளும் 97 இரண்டாம் நிலை பதவிகளும், 40 முதன்மை நிலை பதவிகளும் 45 ஏனைய பதவிகளுமாக 184 பதவிகள் மேலதிகமாக காணப்பட்டன. 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதியத்தின் அனுமதிக்கப்பட்ட பணிநிலை 3008 ஆக காணப்பட்டதுடன் 11 உயர் மட்ட பதவிகளும் 20 மூன்றாம் நிலை பதவிகளும் 136 இரண்டாம் நிலை பதவிகளும் 498 முதன்மை நிலை பதவிகளுமாக அத் திகதிக்கு 665 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலைக்காக ஏற்றுக் கொள்கின்றேன் | நிறுவனம் வினைத்திறனாக பேணப்படுவதற்கு தேவையான பணிநிலை வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கும் தேவைக்கேற்ப பணிநிலை இணைக்கப்படுவதை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலைக்காக கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | பதவிகளுக்காக பணி நிலை இணைத்துக் கொள்ளப்படுவதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2018 வருடத்தில் அனுமதிக்கப்பட்ட 87 பதவிகளுக்காக நியாயமான காரணமொன்று குறிப்பிடப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்துடன் அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையை தாண்டி ஒப்பந்த அடிப்படையில் 139 பதவிகள் இணைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இணைத்தல் நடைமுறையில் காணப்படாத 45 பதவிகளுக்காகவும் இணைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான அனுமதி இல்லாது அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்கு மேலதிகமாக இணைக்கப்டுதல் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அனுமதிக்கப்பட்டிருந்த பதவிகளுக்காக அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மிகையாக ஒப்பந்த/ பதிற் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையில் 05 அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்காக 104 நபர்களும் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்காக இணைக்கப்படல் நிரந்தர அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பினும் 16 அனுமதிக்கப்பட்ட | பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகளுக்காக காதாரண/ ஒப்பந்த/ பதிற் கடமை /கடமை நிறைவேற்றல் அடிப்படையில் 123 நபர்களும் அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்கு வெளியாக 07 பதவிகளுக்காக (அனுமதிக்கப்படாத பதவிகள்) ஒப்பந்த அடிப்படையில், மாவட்ட அடிப்படையில் மற்றும் பயிர்ச்சியாக 1492 நபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | | |
| **(உ)** | நிதியத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியொன்று இல்லாத பணிப்பாளர் (சமய) பதவிக்காக 2017 யூன் 21 ஆம் திகதியிலிருந்து 2018 மே 31 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்காக ரூபா 1,060,521 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். தற்போது சேவையில் இல்லை. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முறையான அனுமதி இல்லாது அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்கு மேலதிகமாக இணைத்துக்கொள்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஊ)** | மத்திய கலாசார நிதியத்திற்காக புதிய இணைத்துக் கொள்ளல் நடைமுறையொன்று தயாரிப்பதற்காக 2017 ஆகஸ்ட் 08 ஆம் திகதி நடைப்பெற்ற நிதியத்தின் கட்டுப்பாட்டு சபை கூட்டங்கள் 203 இல் அனுமதி பெறப்பட்டு அந்த பணி நிறைவேற்றப்படுவதற்காக 2017 யூன் மாதத்தில் குழுவொன்றிற்கு கொடுக்கப்பட்டிருப்பினும் 2020 யூலை வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | புதிய இணைத்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுமதி பெறப்படுவதற்கு மற்றும் இணைத்தல் முறைமையாக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(எ)** | அரசின் வேறு திணைக்களம் அல்லது நிறுவனத்திற்காக ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்படாதவிடத்தும் தொல்பொருளியல் திணைக்களத்திற்காக 2,271 தொல்பொருளியல் உதவியாளர்கள் (தொழிலாளர்கள்) மற்றும் 1,130 காவற்காரர்கள் ஆக 3,401 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு 2017 ஒக்தோம்பர் 17 ஆம் திகதி நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதி வரையில் இணைக்கப்பட்டிருந்த மொத்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 713 தொல்பொருளியல் உதவியாளர்கள் (தொழிலாளர்கள்) மற்றும் 376 காவற்காரர்கள் என்று மொத்தம் 1089 ஆகும். இந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 479,356,993 செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 1415 தொல்பொருளியல் உதவியாளர்கள் மற்றும் காவற்காரர்களுக்கு சம்பளம் மற்றும் | ஏற்றுக் கொள்கின்றேன் | அரசின் வேறு திணைக்களம் அல்லது நிறுவனத்திற்காக இணைத்தல் தவிர்க்கப்பட நடவளக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேதனங்களாக ரூபா 582,188,826 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| **(ஏ)** | பொலன்நறுவை செயற்திட்டத்தில் கடமையாற்றுகின்ற 13 உத்தியோகத்தர்கள் அந்த செயற்திட்டத்திலேயே 20 வருடங்கள் தொடக்கம் 26 வருடங்கள் வரை காலவறைக்குள் தொடர்ச்சியாக கடமையாற்றுதல் அவதானிக்கப்பட்டதுடன் அதில் 12 நபர்கள் பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்களாக காணப்பட்டதுடன் மற்றைய உத்தியோகத்தர் பிரதான அனுமதி பத்திரம் விற்பனை அதிகாரியாகும். | பதில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை வலுவாகும் வகையில் வருடாந்த இடமாற்ற கொள்கை முறையாக செயற்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் உறுதி கூறல் வேண்டும. |
| **(ஐ)** | நிதியத்தின் இணைத்தல் நடைமுறையில் காணப்படாத செயற்திட்ட ஒருங்கிணைப்பு பணிப்பாளர் பதவியொன்றிற்காக உத்தியோகத்தொருவர் பணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகத்தர் இணைக்கப்பட்ட 2019 பெப்ரவரி 11 மே திகதியில் இருந்து 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ரூபா 111,188 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்படவில்லை. | இணைத்தல் நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காணப்படல் வேண்டும். |

## 2.9 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெரிய உழிய எண்ணிக்கை மற்றும் செயற்திட்டங்களினை கொண்ட நிதியத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவுக்காக அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை 04 ஆவதுடன் தற்போது அனுமதிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கையில் பதிற் கடமை அடிப்படையில் காணப்படுகின்ற உள்ளக கணக்காய்வாளர் மற்றும் இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மட்டும் கடமையாற்றுவதுடன் 05 முகாமைத்து உதவியாளர்களும் கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் நிறுவனத்தின் விடப்பரப்பு அடையப்படும் விதத்தில் போதுமான உள்ளக கணக்காய்வு அலுவலர்கள் எண்ணிக்கை பணிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | பதில் அனுப்பப்பட்டிருக்கவி ல்லை. | நிறுவனத்தின் விடப்பரப்பு அடையப்படும் விதத்தில், உள்ளக கணக்காய்வு பிரிவுக்காக போதுமான பணி நிலையொன்று பணிக்கப்படல் வேண்டும். |